ු ම හිමිකම් ඇවිරිණි]
ப் பதிப்புரிமையுடையது)
Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

# இலங்கை வெளிநாட்டுச் சேவையின் III ஆந் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை, 1999 மார்ச்

# Open Competitive Examination for Recruitment to Grade III of the Sri Lanka Foreign Service - March 1999

## (03) உலக விவகாரம் II (பொருளியல்) / World Affairs II (Economic)

மூன்று மணித்தியாலங்கள்
*Three hours*

ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

---

1. 1997 - 1998 காலப்பகுதியில் தென்கிழக்காசிய நாடுகளில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்கு ஏதுவான பிரதான காரணிகள் யாவை?

2. இந்தோ - இலங்கை தாராள வர்த்தக ஒப்பந்தத்தின் (Indo - Lanka Free Trade Agreement) இயல்பினை சுருக்கமாக விளக்குக. உமது கருத்தின்படி, இலங்கையின் பொருளாதாரத்துக்கு இவ்வொப்பந்தம் பெற்றுத் தரும் பங்களிப்பு யாது?

3. "உலக மயமாக்கலானது தன்னோடு சவால்கள், புதிய வாய்ப்புகள் ஆகிய இரண்டையும் வளர்முக நாடுகளுக்கு கொண்டு செல்கின்றது" இக் கூற்றினைப் பரிசீலிக்குக.

4. வெளிநாட்டு உதவிகளின் முக்கியத்துவம் குறைகின்றபோது வெளிநாட்டு நேர் முதலீட்டின் முக்கியத்துவம் அதிகரிக்கும் நிலை ஏற்படுகிறது. அபிவிருத்திக் கொள்கைகளுக்கான இம்மாற்றத்தின் தாற்பரியங்களை (Implication) ப் பரிசீலிக்குக.

5. "யூரோ நாணயத்தின் அறிமுகமானது, சர்வதேச பொருளாதாரத்தில் அமெரிக்க டொலரின் ஆதிக்கத்துக்கு ஒரு பெருஞ் சவால்" என்று அடிக்கடி கூறப்படும் கூற்றினைப் பற்றி கருத்துரை வழங்குக.

6. "சர்வதேச பொருளாதாரத்தில் ஏற்பட்ட அண்மைக்கால அபிவிருத்திகள், சர்வதேச நாணய நிதியமானது சீர்திருத்தங்களை வேண்டி நிற்கிறதென்பதை தெளிவாகக் காட்டுகின்றன." இதனை விளக்கி உமது கருத்தினைத் தருக.

7. '**நிலையான அபிவிருத்தி**' (sustainable development) என்னும் எண்ணக் கருவை விளக்குக. வளர்ச்சியடைந்த, வளர்முக நாடுகளில் பொருளாதாரக் கொள்கைகளுக்கான இவ்வெண்ணக் கருவின் தாற்பரியங்கள் (Implications) யாவை?

8. பின்வரும் நிறுவனங்கள் / உடன்படிக்கைகளில் எவையேனும் **மூன்றினது** நடவடிக்கைகளை சுருக்கமாக விளக்குக
   - (i) யுனிசெப் (UNICEF)
   - (ii) காட் (GATT)
   - (iii) இஃபாட் (IFAD)
   - (iv) நாஃப்டா (NAFTA)
   - (v) ஒபெக் (OPEC)

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

162

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

# இலங்கை வெளிநாட்டுச் சேவையின் III ஆந் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை, 1999 மார்ச்

# Open Competitive Examination for Recruitment to Grade III of the Sri Lanka Foreign Service - March 1999

(02) உலக விவகாரம் I (அரசியல்) — மூன்று மணித்தியாலங்கள்
World Affairs I (Political) — *Three hours*

ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

---

1 அ. G. 15 குழுவின் பிரதான நோக்கங்கள் யாவை?
ஆ. G. 15 குழுவின் அங்கத்துவ நாடுகள் **ஐந்தின்** பெயர் தருக.
இ. G. 15 குழுவில் இணைவதால் இலங்கை பெறக் கூடிய நன்மைகளை நுணுகி மதிப்பிடுக.

2 அ. "சார்க்" அமைப்பின் முக்கிய நோக்கங்கள் யாவை?
ஆ. இலங்கைக்கு சார்க் அமைப்பு இதுவரை ஆற்றியுள்ள சேவைகளை மதிப்பிடுக.

3 அ. இந்திய, பாக்கிஸ்தான் பிணக்குகளுக்கான முக்கிய காரணங்கள் யாவை?
ஆ. இப்பிணக்குகளை மோசமடையச் செய்த அண்மைக்கால நிகழ்வுகள் யாவை?
இ. இப்பிரச்சினைகளுக்கு இணக்கம் காணும் வகையில் எடுக்கப்பட்ட சமீபகால முயற்சிகளை மதிப்பிடுக.

4 அ. உலகில் காணப்படும் **ஐந்து** பிரிவினைவாத இயக்கங்களையும், அவை செயற்படும் நாடுகளையும் குறிப்பிடுக.
ஆ. கொசோவா பிரச்சினைக்கான முக்கிய காரணங்கள் யாவை?
இ. இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான நேட்டோ (Nato) அமைப்பின் தலையீடு தொடர்பான சாதகமானதும், பாதகமானதுமான வாதங்களை ஆராய்க.

5 அ. 1980 இன் பின் உலக அரசியலில் ஏற்பட்ட இரண்டு முக்கிய மாற்றங்களைக் குறிப்பிடுக.
ஆ. 1980 இன் உலகில் தோற்றம் பெற்ற ஐந்து நாடுகளைச் குறிப்பிடுக.
இ. புதிய உலக அரசியல் கோலத்தினுள் ஐக்கிய அமெரிக்காவின் நிலையை மதிப்பிடுக.

6 அ. ஐரோப்பிய சமூகத்தின் அங்கத்துவ நாடுகள் **ஐந்தின்** பெயர் தருக.
ஆ. ஐரோப்பிய சமூகத்தைத் தாபிப்பதற்கான முக்கிய நோக்கங்கள் யாவை?
இ. யூரோ நாணய அறிமுகத்தினால் ஐரோப்பிய சமூகம் எதிர்பார்க்கும் பெறுபேறுகளையும், இது மூன்றாம் உலக நாடுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் முறைகளையும் ஆராய்க.

8 அ. "ஒரே சீனா"வைத் தோற்றுவித்தல் (One China) என்பதால் கருதப்படுவது யாது?
ஆ. இவ்வாறு "ஒரே சீனா" தோற்றுவிக்கப்பட்டால் உலக அரசியலில் ஏற்படும் விளைவுகளை ஆராய்ந்து மதிப்பிடுக.

9 அ. மத்திய கிழக்குப் பிரச்சினைக்கான முக்கிய காரணங்கள் யாவை?
ஆ. இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அண்மைக்காலத்தில் எடுக்கப்பட்ட முயற்சிகள் யாவை?
இ. இப்போதுள்ள சூழ்நிலையில் இம்முயற்சிகள் எவ்வளவு தூரத்திற்கு வெற்றியளித்துள்ளன?

10. பின்வருவனவற்றுள் **நான்கினுக்குச்** சிறு குறிப்புகள் எழுதுக.

(அ) ஈராக் தொடர்பான ஐக்கிய நாடுகளின் விசேட ஆணைக்குழு (UNS COM).
(ஆ) ஆசிய அபிவிருத்தி வங்கி.
(இ) ஐக்கிய நாடுகளின் சூழல் நிகழ்ச்சித் திட்டம் (UNEP).
(ஈ) இந்தியா - இலங்கை தாராள வர்த்தக உடன்படிக்கை.
(உ) ஜோர்தானின் முன்னாள் மன்னர் ஹுசெய்ன்.
(ஊ) நைஜீரியா.
(எ) 'மிலேனியம் பக்' (Millenium Bug).
(ஏ) கிரிக்கெட்டுக்கான உலக சாம்பியன் பதவி.

P.m 1.30 – 4.30

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமை உடையது
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

## Open Competitive Examination for Recruitment to Grade III of the Sri Lanka Foreign Service - March 1999

## இலங்கை வெளிநாட்டுச் சேவையின் III ஆந் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை, 1999 மார்ச்

(04) கட்டுரைகள்
Essays

மூன்று மணித்தியாலங்கள்
*Three hours*

கீழ்வரும் தலைப்புகளில் **மூன்றினைத்** தெரிந்து கட்டுரை வரைக.

---

1. தகவல் சகாப்தமும் ஊடக சுதந்திரமும்.

2. "போரினால் மட்டும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியாது"

3. இந்திய – பாகிஸ்தான் உறவில் அண்மைக்கால நடவடிக்கைகள்.

4. சமூகத்தில் பத்திரிகைகளின் பணி.

5. "இலங்கையில் நடைமுறையிலுள்ள தேர்தல் முறைமை திருத்தியமைக்கப்பட வேண்டும்".

6. தென்கிழக்காசியாவின் தற்போதைய அரசியல் பொருளாதாரப் பிரச்சினைகள்.

7. "கல்விச் சீர்திருத்தங்கள் உள்ளக சமூக மாற்றங்களின் பிரதிபலிப்பாகும்".

8. இன்றைய உலகின் வலுச்சமநிலையும், ஐக்கிய நாடுகள் சபையும்.

9. இலங்கையின் திரைப்படக்கைத்தொழிலின் தற்போதைய நெருக்கடி நிலையும் இவற்றுக்கான தீர்வுகளும்.

10. உலக மயமாக்குதல் – இதன் பிராந்திய விளைவுகள்

11. 'பல்கலைக்கழகங்களின் பொறுப்பு உண்மையைத் தேடுதல் மட்டுமன்று'.

12. "கலைகள் யதார்த்தத்தைப் பதிவுசெய்து வைப்பன அன்று, அனைத்து மானிட அனுபவங்களையும் பிரதிபலிப்பனவாகும்".